SINCE 2013
We Shine Academy®
guiding you to get through
TNPSC | TNUSRB | TET | SSC | BANK EXAM

**DAILY CURRENT AFFAIRS ON 04/ 03/2026**



# Environmental clearance should be made mandatory for large solar projects: NGO

Poovulagin Nanbargal says rapid expansion of ground-mounted solar parks is encroaching on agricultural and grazing lands; it alleges that this practice has triggered protests in several districts



**High losses:** The organisation also voiced concern over the focus on large, centralised solar parks, and said that transmission losses in such systems can be as high as 25%. FILE PHOTO

## MAJOR ENVIRONMENTAL POLICIES AND ACTS IN INDIA

- The Indian Forest Act, 1927
- The Wildlife Protection Act, 1972
- The Water (Prevention and Control of Pollution) Act, 1974
- The Forest (Conservation) Act, 1980
- The Air (Prevention and Control of Pollution) Act, 1981
- The Environment (Protection) Act, 1986
- The Biological Diversity Act, 2002
- The Forest Rights Act, 2006
- National Green Tribunal (NGT) Act, 2010
- National Action Plan on Climate Change (NAPCC), 2008
- Swachh Bharat Mission, 2014
- Namami Gange Programme, 2014

## ENVIRONMENTAL IMPACT ASSESSMENT (EIA)

*EIA is a study conducted in the early stages of development project planning to predict and address potential environmental impacts*




- **Statutory Status:** Environmental (Protection) Act, 1986 (Made EIA mandatory)
- **Nodal Ministry:** Ministry of Environment, Forest and Climate Change (MoEF&CC)
- **Project Categorisation:** EIA Notification of 2006 categorised the developmental projects in:
- **Category A Project:** Needed prior Environmental Clearance (EC) from MoEF&CC
- **Category B Project:** Needed prior EC from State/UT Govt.
  - **Category B1 projects** (Mandatorily requires EIA)
  - **Category B2 projects** (Do not require EIA)

*There are 39 categories of projects that require an EC process and are subject to EIA*

### EIA Process as per EIA Notification, 2006

| Step | Objective | Carried Out By |
|---|---|---|
| Screening | Need of EIA | State Expert Appraisal Committee (SEAC) (Category B) |
| Scoping | Identifies important issues for EIA | Standard Term of Reference (ToR) prepared by MoEF&CC with EAC/SEAC for Category B Projects" |
| Public Consultation | Addresses concerns of affected people | State Pollution Control Board (SPCB)/ UT Pollution Control Board (UTPCB) |
| Project Appraisal | Scrutiny of Final EIA Report/ Environmental Management Plan (EMP) | EAC for category A Projects and SEAC for category B1 Projects |
| Decision Making | Granting EC | Category A: MoEf&CC<br>Category B: State EIA Authority (SEIAA) |
| Monitoring (Post EC) | Compliance of general and specific conditions | SPCB / UTPCB and Regional Offices |

### Government Initiatives For EC

- **PARIVESH (Proactive and Responsive facilitation by Interactive, Virtuous, and Environmental Single Window Hub):** Single Window System for EC
  - Developed by MoEF&CC and National Information Centre (NIC)
- **Environmental Information System (ENVIS):** Collect, Collate, Storing, Retrieving and Disseminating Information Related to the Environment Sector
- **Draft Environmental Impact Assessment Notification 2020:** Published by MoEF&CC to replace existing EIA Notification, 2006

# திறனகங்கள், நான் முதல்வன் திட்ட பல்கலை. செயல்பாட்டு மையங்கள்

## துணை முதல்வர் உதயநிதி திறந்து வைத்தார்

சென்னை, மார்ச் 3: தமிழகத்தின் 23 மாவட்டங்களில் அமைக்கப்பட்ட திறனகங்கள், 11 நான் முதல்வன் திட்ட பல்கலைக்கழகச் செயல்பாட்டு மையங்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு மகளிர் வேலை வாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ள நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க வசதியாக 23 மாவட்டங்களில் 'திறனகங்கள்' அமைக்கப்பட்டன. இதேபோல, அண்ணா பல்கலைக்கழகம் உள்பட 11 அரசு பல்கலைக்கழகங்களில் 'நான் முதல்வன்' திட்ட பல்கலைக்கழகச் செயல்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டன. இவற்றை சென்னையில் உள்ள தனது முகாம் அலுவலகத்தில் இருந்து காணொலி வாயிலாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்:** தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், மாநில திட்டக்குழு இடையே நிறுவன அமைப்புகளை வலுப்படுத்துதல், நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் உருவாக்குதல், ஒருங்கிணைந்த தொழில் வழிகாட்டுதல் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாறிக் கொள்ளப்பட்டது.




துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு.நாசர், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலர் பிரதீப்யாதவ், பொதுத்துறை செயலர் ரீட்டா ஹரீஷ் தக்கர், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன தலைவர் கி.பாலசுப்ரமணியம், தமிழ்நாடு திறன் கழக நிர்வாக இயக்குநர் கிராந்தி குமார் பாடி, வர்த்தக சபையினர்.

மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், ஐஐடி மெட்ராஸ் இடையே மாவட்ட திறன் அலுவலர்கள், திட்ட நிர்வாகிகளுக்கான பயிற்றுநர் பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டல் பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இதேபோல, அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்துடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் (ஆட்டோமொபைல்), தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் (தளவாடங்கள்), தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் (சுகாதார நலன்), தென்னிந்திய தொழில் வர்த்தக சபை, ஆர்.எம்.கே.குழும கல்வி நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டன.

இந்த நிகழ்வுகளில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு.நாசர், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, பொதுத்துறை முதன்மைச் செயலர் ரீட்டா ஹரீஷ் தக்கர், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத் தலைவரும், நிர்வாக இயக்குநருமான கி.பாலசுப்பிரமணியம், தென்னிந்திய தொழில் வர்த்தக சபையின் மூத்த துணைத் தலைவர் வி.என்.சிவசங்கர், மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலர் எஸ். சுதா, ஆர்.எம்.கே.குழும கல்லூரி முதல்வர் கே.கே.சிவஞான பிரபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.






## New speciality centre established at Omandurar hospital for sportspersons

# State gives special grant of ₹2,000 to 37.79 lakh elderly, destitutes, transpersons

The move, which comes when the State is about to face the Assembly election, is the second cash bonanza after the one provided last month to *Kalaignar Magalir Urimai Thittam* beneficiaries

The Hindu Bureau
CHENNAI

The Tamil Nadu government on Tuesday gave a special grant of ₹2,000 each to old age pensioners, and destitutes, transpersons, and persons with disabilities (PwDs) who receive monthly grants.

Chief Minister M.K. Stalin said the special grant was credited into the bank accounts of the beneficiaries along with the monthly aid for March. The decision comes when Tamil Nadu is set to face the Assembly election soon.

Calling this a "special grant for the marginalised", Mr. Stalin said the government received representations that beneficiaries of *Kalaignar Magalir Urimai Thittam* should be extended to these sections too.

"We have fulfilled the request they made with a hope. We have given a special grant of ₹2,000, along



> The govt. received representations that the grant given last month to *Kalaignar Magalir Urimai Thittam* beneficiaries should be extended to these sections too. We have fulfilled the request they made with a hope
>
> **M.K. STALIN**
> T.N. Chief Minister

indigence," he said. About 29.29 lakh beneficiaries who received grant under social security programmes have been given ₹3,200 each, while about 5.92 lakh PwDs have been given ₹3,500 each, Mr. Stalin said. Those who receive a maintenance allowance have been given ₹4,000 each.

The Chief Minister said the special relief assistance of ₹8,000 each for the fishing ban season was being given to about 1.62 lakh fishermen families cumulatively for April, May, and June.

**MSP for tea**

Mr. Stalin said ₹8.53 crore was being given as a minimum support price (MSP) for tea for the benefit of 14,870 tea-growers in the Nilgiris district over tea procurement from 15 cooperative tea factories. "Let me assert one thing now: we will never leave even a single person behind in Tamil Nadu's deve-




# புற்றுநோய்க்கு நவீன கார்-டி நுட்ப சிகிச்சை அறிமுகம்


**சென்னை, மார்ச் 3:** புற்றுநோய்க்கு எதிராக செயல்படும் கார்-டி செல் சிகிச்சை நுட்பத்தை சென்னை எம்ஜிஎம் ஹெல்த்கேர் மருத்துவ மனை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, மருத்துவமனையின் குருதிசார் புற்று நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் எம்.கோபிநாதன் கூறியதாவது:

ரத்தம் சார்ந்த புற்றுநோய் பாதிப்புகளுக்கு உள்ளானவர்களுக்கு புற்று செல்கள் பல்வேறு கட்ட சிகிச்சைகளுக்கு பிறகும் அழியாமல் இருந்தால் அவர்களுக்கு கார்-டி செல் சிகிச்சை முறை பரிந்துரைக்கப்படுகிறது. அதாவது உடலின் ரத்த வெள்ளையணுக்களில் உள்ள எதிர்ப்பாற்றலுக்கான டி-செல்களானது தனியே பிரித்தெடுக்கப்பட்டு, ஆய்வகத்தில் சில மாறுதல்களுக்கு உட்படுத்தப்படும்.

அதன்படி, அந்த செல்களில் சிமெட்ரிக் ஆன்டிஜென் ரெசப்டார் எனப்படும் எதிர்ப்பாற்றல் ஏற்பிகள் மேம்படுத்தப்பட்டு கார்-டி செல்லாக அவை மாற்றப்படும்.

அந்த செல்கள் நோயாளியின் உடலில் செலுத்தப்படும்போது புற்றுநோய்க்கு எதிரான எதிர்ப்பாற்றல் வாழ்நாள் முழுவதும் இருந்து கொண்டே இருக்கும். இதனால், புதிதாக புற்று செல்கள் உருவானாலும் அவற்றை எதிர்த்து உடலின் எதிர்ப்பாற்றலே போராடும். அந்த வகையிலான சிகிச்சையை தற்போது நாங்கள் தொடங்கியுள்ளோம் என்றார் அவர்.




# உலகத் தரத்துடன் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்

## தொழில் துறைக்கு பிரதமர் அழைப்பு

**புது தில்லி, மார்ச் 3:** பல்வேறு நாடுகள் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களால் உருவாகியுள்ள பரந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, உலகத் தரத்திலான உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று இந்திய தொழில் துறையினருக்கு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

2026-27-ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் தாக்கலுக்குப் பிறகான இரண்டாவது இணையவழிக் கருத்தரங்கில் பிரதமர் மோடி செவ்வாய்க்கிழமை உரையாற்றினார். அப்போது, அவர் பேசியதாவது:

உலகம் இப்போது நம்பகமான, மீள்தன்மை கொண்ட உற்பத்திக் கூட்டாளர்களை எதிர்நோக்குகிறது. இந்தப் பங்கை உறுதியுடன் வகித்து, உலகளாவிய விநியோகச் சங்கிலியில் நமது பங்கேற்பை மேம்படுத்தும் வாய்ப்பு இந்தியாவுக்கு உள்ளது.

தொழில் துறையினர் நம்பிக்கையுடன் முதலீடுகளைமேற்கொள்ள வேண்டும். புதிய தொழில்நுட்பங்களை ஏற்பதுடன், ஆராய்ச்சித் துறையில் முதலீட்டை அதிகரிக்க வேண்டும். ஆராய்ச்சித் துறையில் நாம் சிக்கனமாக இருந்த காலகட்டம் முடிந்துவிட்டது.

நமது பொருள்கள், உலகளாவிய தரநிலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். நாம் முன்னேற ஏராளமான வாய்ப்புகள் உருவாகியுள்ள சூழலில், தரமே நமது தாரக மந்திரம்.

பல்வேறு நாடுகளுடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. இதன்மூலம் கிடைத்துள்ள பரந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அதே வேளையில், தரத்தில் எவ்வித சமரசத்துக்கும் இடமளிக்கக் கூடாது.

**பிற நாடுகளின் சந்தைகள்...:** நாம் அதிகபட்ச உறுதிப்பாடு, நுட்பம் மற்றும் கவனம் செலுத்த வேண்டிய ஓர் அம்சம் உண்டெனில், அது தரம் மட்டுமே. பிற நாடுகளின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்து ஆய்வுகளில் ஈடுபட வேண்டும். அந்நாட்டு சந்தைகளில் நுகர்வோரின் விருப்பங்கள், வசதிகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.



அதிக கட்டமைப்பு, அதிக உற்பத்தி, அதிக இணைப்பு மற்றும் அதிக ஏற்றுமதி இவைதான் நமது பாதை, உறுதிப்பாடு. தொழில் துறை, நிதி அமைப்புகள், மாநில அரசுகள் ஒருங்கிணைந்து பணியாற்றினால்தான், நமது தொலைநோக்குப் பார்வையை நனவாக்க முடியும்.



உற்பத்தியை அதிகரிப்பதுடன் செலவுக் கட்டமைப்பை போட்டித் தன்மைக்கு ஏற்ப மாற்றுதல், முதலீடுகளை விரைவுபடுத்துதல், நாட்டின் அனைத்து மூலைகளையும் வளர்ச்சி சென்றடைவதை உறுதி செய்தல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**தொழில் துறையினரின் பொறுப்பு:** துடிப்பான பொருளாதாரத்தால், உலகின் நம்பிக்கை ஒளியாக இந்தியா உருவெடுத்துள்ளது. வளர்ந்த பாரதம் இலக்கை எட்ட வேகமான பொருளாதார வளர்ச்சியே அடிப்படை. இதற்கான செயல்திட்டம், 2026-27 பட்ஜெட்டில் முன்வைக்கப்பட்டுள்ளது. இனி உற்பத்திக்கு உத்வேகமளிப்பது தொழில் துறையினரின் பொறுப்பு.

உற்பத்தி அதிகரித்தால், வாய்ப்புகள் விரிவடைந்து, ஏற்றுமதி அதிகரிக்கும். பொருளாதாரத்தின் தூண்களான உற்பத்தி, சரக்கு கையாளுகை, குறு- சிறு-நடுத்தர தொழில் நிறுவனங்கள், குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு-பெருநகரங்களின் மேம்பாட்டுக்கு பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.


அரிய புவி கனிமங்கள் தொழில் வழித்தடம், கன்டெய்னர் உற்பத்தி போன்ற துறைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் நமது வர்த்தக கட்டமைப்பை வலுப்படுத்த அரசு தீவிரமாக செயலாற்றி வருகிறது என்றார் பிரதமர் மோடி.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

| | |
|---|---|
| <br># இந்தியாவிடம் போதிய அளவு கச்சா எண்ணெய் கையிருப்பு<br>**மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி**<br>**புது தில்லி, மார்ச் 3:** இந்தியாவிடம் போதிய அளவு கச்சா எண்ணெய் கையிருப்பில் உள்ளதாக மத்திய பெட்ரோலிய துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.<br>கச்சா எண்ணெய்யில் இருந்து பெட்ரோல், டீசல் பிரித்தெடுக்கப்படும் நிலையில், தனது கச்சா எண்ணெய் தேவையில் சுமார் 88 சதவீதத்தை இறக்குமதி மூலம் இந்தியா பூர்த்தி செய்கிறது. அதில் 50 சதவீதத்துக்கும் அதிகமான கச்சா எண்ணெய் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து ஹோர்முஸ் நீரிணை வழியாக இறக்குமதி செய்யப்படுகின்றன. ஈரான்–அமெரிக்கா–இஸ்ரேல் போர் காரணமாக இந்த நீரிணை வழியாக சரக்குக் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.<br>இந்நிலையில், இந்தியாவிடம் உள்ள கச்சா எண்ணெய் கையிருப்பு குறித்து புது தில்லியில் மத்திய பெட்ரோலிய துறை அமைச்சர் ஹர்தீப் சிங் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியதாவது:<br>தற்போது மத்திய கிழக்குப் போரால் ஏற்பட்டுள்ள குறுகிய கால இடர்ப்பாடுகளைக் கையாளும் வகையில், இந்தியாவிடம் போதிய அளவு கச்சா எண்ணெய் கையிருப்பில் உள்ளது. இதேபோல பெட்ரோல்,டீசல்,விமான எரிபொருள் உள்ளிட்டவையும் தேவையான அளவு உள்ளன.<br>ஹோர்முஸ் நீரிணை வழியாகக் கொண்டுவரப்படாமல், வேறு வழிகளிலும் எரிசக்தி விநியோகிக்கப்படுகிறது. அந்த எரிசக்தியை இந்திய எரிசக்தி நிறுவனங்களால் பெற முடிகிறது. அந்த சரக்குகள் இந்தியாவுக்குத் தொடர்ந்து கிடைக்கும்.<br>அது ஹோர்முஸ் நீரிணை வழியாக மேற்கொள்ளப்படும் விநியோகத்தில் நிகழும் தற்காலிக பாதிப்பை தணிக்க உதவும்.<br>**24 மணி நேர கட்டுப்பாட்டு அறை:** நாட்டில் பெட்ரோலியம் பொருள்களின் விநியோகம் மற்றும் இருப்பு நிலவரத்தை தொடர்ந்து கண்காணிக்க வாரத்தில் அனைத்து நாள்களும் 24 மணி நேரம் செயல்படக் கூடிய கட்டுப்பாட்டு அறையை மத்திய பெட்ரோலிய அமைச்சகம் நிறுவியுள்ளது. தற்போதைய நிலையில் இந்தியாவிடம் சௌகரியமான அளவு கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது.<br>தொடர் கண்காணிப்பின் அடிப்படையில், தேவைப்பட்டால் சூழலை மேலும் தணிக்க படிப்படியான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என்றார்.<br>**6 முதல் 8 வாரங்களுக்கு...:** இதுகுறித்து மத்திய பெட்ரோலிய அமைச்சக அதிகாரி ஒருவர் கூறியதாவது: உள்நாட்டில் பெட்ரோல், டீசல் மற்றும் பிற எரிபொருள்களின் தேவைகளை 6 முதல் 8 வாரங்களுக்கு பூர்த்தி செய்யும் வகையில், இந்தியாவிடம் போதிய அளவு கச்சா எண்ணெய் மற்றும் எரிபொருள் கையிருப்பு உள்ளது என்றார். | <br> |
| The Tamil Nadu State Department of Archaeology is set to begin an underwater archaeological survey in mid-September 2025 along which coast?<br><br>A) Rameswaram – Dhanushkodi Coast<br>B) Kanyakumari – Colachel Coast<br>C) Poompuhar – Nagapattinam Coast<br>D) Chennai – Mamallapuram Coast<br><br>**Answer:** C) Poompuhar – Nagapattinam Coast | தமிழ்நாடு மாநில தொல்லியல் துறை 2025 செப்டம்பர் மாத நடுப்பகுதியில் எந்தக் கடற்கரையில் நீர்மூழ்கித் தொல்லியல் ஆய்வைத் தொடங்க உள்ளது?<br><br>A) இராமேஸ்வரம் – தனுஷ்கோடி கடற்கரை<br>B) கன்னியாகுமரி – கொலச்சல் கடற்கரை<br>C) பூம்புகார் – நாகப்பட்டினம் கடற்கரை<br>D) சென்னை – மாமல்லபுரம் கடற்கரை<br><br>**பதில்:** C) பூம்புகார் – நாகப்பட்டினம் கடற்கரை |
| <br> | <br> |
| With reference to marine biodiversity in Tamil Nadu, consider the following statements:<br>1. The Gulf of Mannar region is known for coral reefs and rich marine biodiversity. | தமிழ்நாட்டின் கடல் உயிரியல் பல்வகைமையை (Marine Biodiversity) குறித்து கீழ்க்கண்ட கூற்றுகளை பரிசீலிக்கவும்:<br>1. Gulf of Mannar பகுதி பவளப் பாறைகள் மற்றும் வளமான கடல் உயிரியல் பல்வகைமையால் |

| | |
|---|---|
| 2. TNMRF promotes research related to climate change impacts on coastal ecosystems.<br>3. TNMRF deals exclusively with inland freshwater biodiversity.<br>Which of the statements given above is/are correct?<br>A) 1 and 2 only<br>B) 2 and 3 only<br>C) 1 only<br>D) 1, 2 and 3<br>**Answer:** A) 1 and 2 only | அறியப்படுகிறது.<br>2. Tamil Nadu Marine Resources Foundation (TNMRF) கடற்கரை சூழலியல் அமைப்புகளில் காலநிலை மாற்றத்தின் தாக்கம் தொடர்பான ஆய்வுகளை ஊக்குவிக்கிறது.<br>3. TNMRF முற்றிலும் உள்நாட்டு குடிநீர் (Inland Freshwater) உயிரியல் பல்வகைமையை மட்டும் கையாள்கிறது.<br>மேலே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது/எவைகள் சரியானது?<br>A) 1 மற்றும் 2 மட்டும்<br>B) 2 மற்றும் 3 மட்டும்<br>C) 1 மட்டும்<br>D) 1, 2 மற்றும் 3<br>**பதில்:** A) 1 மற்றும் 2 மட்டும் |
| **Tamil Nadu Marine Resources Foundation (TNMRF)**<br><br>The **Government of Tamil Nadu** launched the **Tamil Nadu Marine Resources Foundation (TNMRF)** as a dedicated body to protect and restore marine biodiversity along the State's long coastline.<br><br>**Objective of TNMRF**<br><br>The foundation has been created to:<br>• Protect and conserve **marine biodiversity**<br>• Restore degraded marine ecosystems<br>• Promote sustainable fisheries management<br>• Strengthen scientific research in marine ecology<br>• Support coastal community livelihoods<br>• Address climate change impacts on coastal ecosystems |  |
| Consider the following statements:<br>1. Maternal Mortality Ratio (MMR) is measured per 10,000 live births.<br>2. Tamil Nadu's MMR declined from 38 to 35 during 2021–2023.<br>3. MMR data in India is released by the Registrar General of India.<br><br>Which of the statements given above is/are correct?<br><br>A) 2 and 3 only | கீழ்க்கண்ட கூற்றுகளை பரிசீலிக்கவும்:<br>1. மாதர் இறப்பு விகிதம் (Maternal Mortality Ratio - MMR) 10,000 உயிர் பிறப்புகளுக்கு அளவிடப்படுகிறது.<br>2. 2021–2023 காலப்பகுதியில் தமிழ்நாட்டின் MMR 38 இலிருந்து 35 ஆக குறைந்தது.<br>3. இந்தியாவில் MMR தொடர்பான தரவுகளை Registrar General of India வெளியிடுகிறது.<br>மேலே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது/எவைகள் சரியானது?<br>A) 2 மற்றும் 3 மட்டும்<br>B) 1 மற்றும் 2 மட்டும் |

B) 1 and 2 only
C) 3 only
D) 1, 2 and 3




C) 3 மட்டும்
D) 1, 2 மற்றும் 3
**பதில்:** A) 2 மற்றும் 3 மட்டும்

Consider the following statements:

1. The Tamil Nadu Cashew Board has its headquarters in Cuddalore.
2. It was constituted by the Union Government under the Ministry of Commerce.
3. The Board aims to promote cashew cultivation and processing in the State.

Which of the statements given above is/are correct?
A) 1 and 3 only
B) 2 and 3 only
C) 1 only
D) 1, 2 and 3
**Answer:** A) 1 and 3 only

கீழ்க்கண்ட கூற்றுகளை பரிசீலிக்கவும்:

1. தமிழ்நாடு முந்திரி வாரியத்தின் தலைமையகம் Cuddalore-ல் அமைந்துள்ளது.
2. இது மத்திய வர்த்தக அமைச்சகத்தின் கீழ் ஒன்றிய அரசால் அமைக்கப்பட்டது.
3. இவ்வாரியம் மாநிலத்தில் முந்திரி சாகுபடி மற்றும் செயலாக்கத்தை (processing) மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது/எவைகள் சரியானது?
A) 1 மற்றும் 3 மட்டும்
B) 2 மற்றும் 3 மட்டும்
C) 1 மட்டும்
D) 1, 2 மற்றும் 3

**பதில்:** A) 1 மற்றும் 3 மட்டும்






# IMPORTANT BOARDS IN INDIA

| Name of the Board | Headquarter | Nodal Ministry | Other Information |
|---|---|---|---|
| Tea Board (1953) | Kolkata (West Bengal) | Ministry of Commerce | • 31 Members. • Reconstituted every 3 years. • 17 Regional offices + 2 Overseas offices in Dubai & Moscow. |
| Coffee Board (1942) | Bengaluru (Karnataka) | Ministry of Commerce | • 33 Members. |
| Spice Board (1987) | Kochi (Kerala) | Ministry of Commerce | • Constituted for development & export promotion of 52 spices mentioned in the Act. |
| Rubber Board (1947) | Kottayam (Kerala) | Ministry of Commerce | • 28 Members. • It issues mandatory licenses to producers, manufacturers & exporters. |
| Tobacco Board (1976) | Guntur (Andhra Pradesh) | Ministry of Commerce | |
| Central Silk (1948) | Bengaluru (Karnataka) | Ministry of Textile | |
| Jute Board (2009) | Kolkata (West Bengal) | Ministry of Textile | |
| Coir Board (1953) | Kochi (Kerala) | Ministry MSME | • Around 70% of the global coir production is done by India. |

UPSC WHATSAPP GROUP- 9120404521
UPSC WHATSAPP GROUP- 9120404521